செ.வெ.எண்: 76 24/1/2011

<u>பொது (தேர்தல்கள்–1)த் துறை</u>

## செய்தி வெளியீடு

## தமிழ்நாட்டில் 2011–ஆம் ஆண்டு தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள்

இந்திய தேர்தல் ஆணையம் தோற்றுவிக்கப்பட்ட நாள் ஜனவரி 25–ம் தேதி ஆகும். ஜனநாயகத் தேர்தல் முறைமைகளில் குடிமக்களின் பங்கேற்பை அதிகப்படுத்தும் ஒரு முயற்சியாக, 2011–ஆம் ஆண்டு ஜனவரி 25–ம் தேதி தொடங்கி ஒவ்வோராண்டும் ஜனவரி 25–ம் நாளை தேசிய வாக்காளர் தினமாகக் கொண்டாட இந்திய தேர்தல் ஆணையம் முடிவெடுத்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் வாக்காளர் பதிவை அதிகப்படுத்தி, வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை வாக்காளர்களுக்கு உணர்த்துவதேயாகும். தேர்தல் நடைமுறைகளில் பொதுமக்களை–குறிப்பாக இளைஞர்களை–ஈடுபடுத்தி, வாக்காளர்களின் விழிப்புணர்வை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், முதலாவது தேசிய வாக்காளர் தினத்தை தமிழ்நாட்டில் பெரிய அளவில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2011–ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத்திருத்தத்தில் 11.50 இலட்சம் புதிய வாக்காளர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தேசிய வாக்காளர் தினத்தன்று மாவட்ட அளவிலும் வாக்குச்சாவடி அளவிலும் நடைபெறும் விழாக்களில் எல்லா புதிய வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படும்

ஆளுநர் மாளிகையில் நடைபெறும் மாநில அளவிலான விழாவில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமை விருந்தினராகப் பங்கேற்பார். ஆளுநர் அவர்கள் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை ஏற்கவைத்து, சிறப்புரையாற்றுவார். புதிதாக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினையும் அவர் வழங்குவார். தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், திரு.சையது முனீர் ஹோதா,

இ.ஆ.ப (ஓய்வு)., அவர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி எஸ்.மாலதி, இ.ஆ.ப., அவர்களும் வாழ்த்துரை வழங்குவார்கள்.

<u>மாநில அளவிலான நடவடிக்கைகள்</u>

மாநில அளவில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

அ) மாநில அளவிலான வர்த்தகப் பொருட்காட்சியில் ஒரு காட்சிக்கூடம் திறக்கப்பட்டுள்ளது. இக்காட்சிக்கூடத்தில் தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக தேர்தல் பற்றியும் தேர்தல் நடைமுறைகள் குறித்தும் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் கீழ்க்கண்டவை வைக்கப்பட்டுள்ளன

1) வாக்காளர் பட்டியல் விவரங்களை விரைந்து தேட வசதியான கணினிகள்

2) வாக்காளர் பதிவுக்கான அனைத்துப் படிவங்கள்

3) மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் செயல்முறை விளக்கம்

4) தேர்தல் நடைமுறைகள் குறித்த வினா–விடைகள்

5) ஸ்லோகன் எழுதும் போட்டி

6) கையெழுத்து இயக்கம்

ஆ) குடியரசு நாள் விழாவில் இடம்பெறும் பொதுத் (தேர்தல்கள்) துறையின் அலங்கார ஊர்தியில் கீழ்க்கண்டவை சித்தரிக்கப்படும்

1) பலதரப்பட்ட (ஆண் பெண், இளையோர் முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நோய்வாய்ப்பட்டோர்) வாக்காளர்கள் வாக்களித்தல்.

2) இளைஞர்களின் அலட்சியமும் வாக்காளர்களுக்கு தகவலளித்து அதிகாரமளித்தல் நடவடிக்கைகள் மூலம் இளைஞர்களை ஊக்கப்படுத்துதலும்.

3) மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் மாதிரி.

4) வாக்காளர்களுக்கு தகவலளிக்கும் விளம்பரங்கள்.

5) அனைத்துக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கு 25.01.2011 அன்று 11.00 மணியளவில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை ஏற்கவைக்குமாறு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

6) இது குறித்த தகவல்கள் மாநிலமெங்கிலுமுள்ள மக்களின் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையுமாறு செய்ய இப்பணியில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டு தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளுக்கு உரிய விளம்பரப் பொருட்கள் கொடுக்கப்பட்டுள்ளன.,

7) குறுந்தகவல் இயக்கமாக கீழ்க்கண்ட குறுந்தகவலை 25.01.2011 அன்று அனைத்து சந்தாதாரர்களுக்கும் அனுப்புவதன்மூலம் தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்துக்கு உதவி செய்யுமாறு பிஎஸ்என்எல் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது:

"பொறுப்புள்ள குடிமக்களாய் இருங்கள். விலை மதிப்பில்லா உங்கள் வாக்கைச் செலுத்துங்கள். வலுவான ஜனநாயகத்திற்கு பெருமளவில் பங்கேற்றல்"

8) "வலுவான ஜனநாயகத்திற்கு பெருமளவில் பங்கேற்றல்" என்ற கருத்தைக் கொண்ட கவர்ச்சி வாக்கியங்கள் ஸ்லோகன்கள் (20 வார்த்தைகளுக்குக் குறைவான வலுவான வாசகங்கள்) போன்றவை எழுதி தலைமைத் தேர்தல் அதிகாரியின் இணையதளத்திற்கு அனுப்பும் போட்டி.

9) வலுவான ஜனநாயகத்திற்காக தேர்தல் நடைமுறைகளில் இளைஞர்கள் பங்கேற்றலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மெரினா கடற்கரையிலிருந்து காந்தி மண்டபம் வரையிலான கல்லூரி மாணவர்களின் மோட்டார் சைக்கிள் அணிவகுப்பு.

10) "வலுவான ஜனநாயகத்திற்கு பெருமளவில் பங்கேற்றல்" என்ற தலைப்பில் அகில இந்திய வானொலியிலும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியிலும் பேச்சரங்கம் மற்றும் குழு விவாதங்கள்.

11) வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாநிலம் முழுவதிலும் ஒரே மாதிரியான வாசகங்கள் கொண்ட சுவரொட்டிகள், சிறு கையேடுகள், ஃப்ளெக்ஸ் போர்டுகள், ஸ்டிக்கர்கள், பேட்ஜுகள் போன்றவை தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு-குறிப்பாக இளைஞர்களுக்கு விநியோகிக்கப்படுவதற்காகவும் முக்கியமான பொது இடங்களில் காட்சிக்கு வைக்கப்படுவதற்காகவும் மேற்கண்டவற்றிற்கான வடிவமைப்பு குறுந்தகடு மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2. மாவட்ட அளவிலான நடவடிக்கைகள்

1) ஒவ்வொரு மாவட்டத்திலும் தேசிய வாக்காளர் தினம் தொடர்பான மாவட்டச் செயல் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செயல் திட்டத்தில் விழிப்புணர்வுப் பேரணிகள், மனிதச் சங்கிலி, இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் போட்டிகள் பண்பாட்டுக் கலைநிகழ்ச்சிகள் போன்றவை அடங்கும்.

2) மாவட்டத் தலைநகரத்தில் 25.01.2011 அன்று நடைபெறும் மாவட்ட அளவிலான விழாவில், மாவட்ட ஆட்சியர் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை அனைவரையும் ஏற்கவைத்து, புதிய வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையினையும் பேட்ஜுகளையும் வழங்குவார். வாக்களித்தல் மற்றும் ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தினைக் குறிக்கும் வகையில் பண்பாட்டுக் கலைநிகழ்ச்சிகளும் போட்டிகளும் நடைபெறும்.

3) 26.01.2011 அன்று கூட்டப்படும் சுய உதவிக்குழுக்களின் பஞ்சாயத்து நிலையிலான குழுமங்களின் பொதுக்குழுவில் வலுவான ஒரு ஜனநாயகத்திற்காக பெண்களின் பங்கேற்பின் முக்கியத்துவம் உணர்த்தப்படும்.

4) 26.01.2011 அன்று கூட்டப்படும் கிராம சபைக் கூட்டங்களின் அலுவல் பட்டியல், வாக்காளர் உரிமைகளும் கடமைகளும் மற்றும் புதிய வாக்காளர்களைப் பதிவு செய்தல் என்ற சிறப்பு அலுவலையும் உள்ளடக்கியிருக்கும்.

## 3. வாக்குச் சாவடி நிலையிலான நடவடிக்கைகள்

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 54,000 வாக்குச் சாவடிகள் அமைந்துள்ள 29,000 அமைவிடங்களில் தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பள்ளித் தலைமையாசிரியர் சிறப்பு விருந்தினராக இருப்பார்.

1) அனைத்து வாக்காளர்களும் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை ஏற்பர்.

2) அந்த வாக்குச் சாவடிப் பரப்பிலுள்ள அனைத்து புதிய வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையும் பேட்ஜும் வழங்கப்படும்.

3) பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்களுக்கு முழு ஆதரவு நல்குமாறு சமூக நிறுவனங்கள், அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஊடகங்கள், பெண்கள் மற்றும் இளைஞர் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

வலுவான ஜனநாயத்திற்கு வழிகோலுவதற்கு ஜனநாயக முறைமையிலான தேர்தல் நடைமுறைகளைக் கடைபிடிக்க புதிய வாக்காளர்களை உந்தும் வகையில் மேற்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் து
சென்னை

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு